# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 89 — 1973 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.12.07

89 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 477 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 479 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும். பிறவும் .. . | 482 | ஆதன விற்பனைகள் .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 483 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 484 |


**கவனிக்க.**—பொலிஸ் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக குருநாகலை மாவட்டத்திலுள்ள குடகல்பொட கிராமப்பிரதேசத்துக் கிராமச்சபைக்கு அக்கிராமப் பிரதேசத்தில் அப்பிரிவின் கீழ் காணிவரியொன்றை விதித்து அறவிடுவதற்கு அதிகாரமளிக்கிறேன்.

பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 20 ந் உ.

12-20—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்புக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு அப்பிரிவின் கீழ் அக்கிராமப்பிரதேசத்தில் காணி வரியொன்றை விதித்து அறவிடுதற்கு அதிகாரமளிக்கின்றேன்.

பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 24 ந் உ.

12-90—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 02 ந் உ.

### பேலியக்கொடை நகரசபை

*களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்*

(267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் பேலியக்கொடை நகரசபையினால் நிறைவேற்றப் பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப் பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச்சட்டத்தின் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்ட ணங்கள் மீது (267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1965 யூலை 23 ன் 14,458 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் விதித்து அற விடப்பட்ட வரிக்குப் பதிலாக, இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

#### கட்டணத் தொகை

*வரித்தொகை நீங்கலான அனுமதிக்கட்டணம்*

| | வரி விகிதம். ரூ. ச |
|---|---|
| 1. 25 சதத்துக்கு மேற்பட ஆனால் 60 சதத்துக்கு மேற்படாம லிருக்குமிடத்து .. .. .. | 0 05 |
| 2. 60 சதத்துக்கு மேற்பட ஆனால் 1.00 ரூபாவுக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 15 |
| 3. 1.00 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 1.50 சதத்துக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 20 |

#### கட்டணத் தொகை

வரித்தொகை நீக்கலாக அனுமதிக்கட்டணம் :

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| 4. 1.50 சதத்துக்கு மேற்பட ஆனால் 2.00 ரூபாவுக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 25 |
| 5. 2.00 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 2.50 சதத்துக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 35 |
| 6. 2.50 சதத்துக்கு மேற்பட ஆனால் 3.00 ரூபாவுக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 50 |
| 7. 3.00 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 3.50 சதத்துக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 60 |
| 8. 3.50 சதத்துக்கு மேற்பட ஆனால் 4.00 ரூபாவுக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 70 |
| 9. 4.00 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 4.50 சதத்துக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 0 85 |
| 10. 4.50 சதத்துக்கு மேற்பட ஆனால் 5.00 ரூபாவுக்கு மேற் படாமலிருக்குமிடத்து .. .. | 1 0 |
| 11. 5.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து கொடுப்பனவின் 25 சதவிகிதம் | |

டி. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ நவெம்பர் ௴ 07 ந் ௳.

12-91—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

### நம்புக்கனைப் பட்டினம்

*களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்*

(267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் நம்புக்கனை, நம்புக்கனைப் பட்டின விசேட ஆணையாளரினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

நம்புக்கனைப் பட்டின நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1947 திசெம்பர் 23 இன் 9811 இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் அத்தகைய கொடுப்பனவு சம்பந்தமாக விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நம்புக்கனைப் பட்டின விசேட ஆணையாளர் இத்தால் விதித்து அற விடுகிறார்.

#### கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| 1. 20 சதத்துக்கு குறையாமலும் ஆனால் 39 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 05 |
| 2. 39 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 59 சதத்துக்கு மேற் படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| 3. 59 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 79 சதத்துக்கு மேற் படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 15 |
| 4. 79 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 99 சதத்துக்கு மேற் படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 20 |
| 5. 99 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 19 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 25 |
| 6. 1 ரூபா 19 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 39 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 30 |
| 7. 1 ரூபா 39 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 59 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 35 |

| வரித்தொகை நீங்கலாக அனுமதிக் கட்டணம் | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| 8. 1 ரூபா 59 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 79 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 40 |
| 9. 1 ரூபா 79 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 99 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 45 |
| 10. 1 ரூபா 99 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபா 19 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 50 |
| 11. 2 ரூபா 19 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபா 39 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 55 |
| 12. 2 ரூபா 39 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபா 59 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 60 |
| 13. 2 ரூபா 59 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபா 79 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 65 |
| 14. 2 ரூபா 79 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபா 99 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 70 |
| 15. 2 ரூபா 99 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபா 19 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 75 |
| 16. 3 ரூபா 19 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபா 39 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 80 |
| 17. 3 ரூபா 39 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபா 59 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 85 |
| 18. 3 ரூபா 59 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபா 79 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 90 |
| 19. 3 ரூபா 79 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபா 99 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 95 |
| 20. 3 ரூபா 99 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 4 ரூபா 19 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 1 0 |
| 21. 4 ரூபா 19 சதத்துக்கு மேற்படுமிடத்துக் கொடுப்பனவின் 25 சதவீதம் | |

டி. இராஜேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ ஒக்ரோபர் ௴ 20 ந் ௳.

12-89—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**உள்ளூராட்சி (நிர்வாகப் பிராந்தியங்கள்) கட்டளைச்சட்டம்**

**(அத்தியாயம் 265)**

பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப் படுகின்றது :—

இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். தியாகலிங்கம் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டீ. டன்போர்த் அவர்கள் கடமைக்குத் திரும்பும்வரை வவுனியாப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பதவியில் 1973 நொவம்பர் 15 ந் திகதியிலிருந்து பதிற் கடமையாற்றுவதற்கு.

டீ. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நொவம்பர் மீ 17 ந் உ.

12-251—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

# பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை " யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

**2. சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

**3. நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாறுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாறுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாறுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாறுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாறுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால் அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாறுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாறுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாறுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாறுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாறுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள் அனாதைகள், இளைப்பாறுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாறுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாறுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாறுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுவபர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாறுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாறுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சிமன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

**4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாறுச் சம்பளமுள்ள பதவிகளின்/இளைப்பாறுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின் " தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒளிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகான காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும் குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

**(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**குறிப்பு.**—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின்மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும்உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர, உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச்சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா? இல்லையா? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத்தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் கட்டணங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ். (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில் நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(...........) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) ........................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
   தேசிய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா? இலங்கையரல்லாதவரா? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் :————.
   (விலாச மாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
   ————வருடங்கள் ————மாதங்கள் ————நாட்கள்.
   (ஆ) பிறந்த திகதி :————.
   வருடம் :————. மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :————
   (அ) விண்ணப்பகாரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா? தனியாளரா? அல்லது தாரமிழந்தவரா? கைம்பெண்ணா? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. .......... | ........ | ...... | 1. .......... | ...... | ...... |
| 1. .......... | ........ | ...... | 1. .......... | ...... | ...... |
| 3. .......... | ........ | ...... | 3. .......... | ...... | ...... |
| 4. .......... | ........ | ...... | 4. .......... | ...... | ...... |
| 5. .......... | ........ | ...... | 5. .......... | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|
| | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தபானங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள்

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்தலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விபரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? ————.

(உ) முன்னைநாட் போர்வீராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :——

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கினறீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச்சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளை இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்பட்டின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

### உள்ளூராட்சிச் சேவை

தரம் I கைதேர்ந்த ஒட்டிப் பொருத்துபவர் (வாயு) பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் அதிகாரசபையால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாகக் காலி மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார்.

2. இப் பதவி நிரந்தரமானது. நியமனம் சகாயநிதி அடிப்படையிலும் 3 வருடத் தகுதிகாண் நிலையிலும் உள்ளது.

3. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூ. 3,240—12 × 60—3,960. மணமானவர்களுக்கு அரசாங்க விதிதங்களின் பிரகாரம் ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்**—(அ) 07.01.1974 தேதியில் 25 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்களுக்கும் ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர்களாக உள்ளவர்களுக்கும் மேலதிக வயதெல்லை பொருந்தமாட்டாது).

(ஆ) (1) வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் பதிவுகளை வைத்திருப்பதற்கும் தெரிந்திருத்தல் வேண்டும்.

(2) காய்ச்சி ஒட்டுதலில் தவறுகள் ஏற்படுவதன் காரணம் ; அதை ஏற்படாமற்றடுக்கும் முறைகள் பற்றியும், தரம் II கைதேர்ந்த ஒட்டிப் பொருத்துபவர் தரத்தில், காய்ச்சி ஒட்டுவதன் முன்னர், வார்ப்பை முன்னதாகச் சூடுபடுத்துவதின் அவசியத்தையும் அறிவதற்கு தெரிந்திருக்க வேண்டும்.

(இ) (1) உள்ளூராட்சிச் சேவையில் கைதேர்ந்த தரம் II ஒட்டிப் பொருத்துபவராக 8 வருட அனுபவம் இருத்தல் வேண்டும், அல்லது

(2) உள்ளூராட்சிச் சேவையில் கைதேர்ந்த தரம் II ஒட்டிப்பொருத்துபவராக குறைந்தது 3 வருடச் சேவை இருத்தல் வேண்டும். அத்துடன் நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு கைதேர்ந்த தரம் I தொழிலாளராகக் குறைந்தது 6 வருட சேவை இருத்தல் வேண்டும், அல்லது

(3) ஒரு நன்கு மதிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தரம் I கைதேர்ந்த ஒட்டிப் பொருத்துபவராகவும் உள்ளூராட்சிச் சேவையில் ஒரு தரம் II கைதேர்ந்த ஒட்டிப்பொருத்துபவராகவும் 9 வருட அனுபவம் (குறைந்தது) இருத்தல் வேண்டும் I அல்லது

(4) நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு தரம் I கைதேர்ந்த ஒட்டிப்பொருத்துபவராக குறைந்தது 6 வருடச் சேவை இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) 2 ம், 3 ம், 4 ம், பந்திகளில் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் சேவையாற்றியதன் சார்பாக சான்றிதழ்கள் ஆதாரமாக அனுப்பப்பட வேண்டும். விண்ணபத்துடன் அவற்றின் **பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

(2) பந்திகள் 1, 2 என்பவற்றில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படாவிட்டால் மாத்திரமே பந்தி 3 ல் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(3) மேற்கூறப்பட்ட வேறு தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் பெறப்படாவிட்டால் மாத்திரமே மேற்படி பந்தி 4 ல் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் நற்குணம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். (உள்ளூராட்சிச் சேவையில் அங்கத்தவர்களாக இல்லாமலும், உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றுமலும் இருக்கும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணபத்துடன் இரு பொறுப்பானவர்களால் கொடுக்கப்பட்ட சானறிதழ்களை அனுப்ப வேண்டும்).

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 07.01.74 ற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 13 வது பகுதிக்குப் பதிலாக பின்வருவது சேர்க்கப்பட வேண்டும் :—

" 13 (அ) காய்ச்சி ஒட்டுதலில் தவறுகள் ஏற்படுவதன் காரணம், அதை ஏற்படாமற்றடுக்கும் முறைகள் பற்றியும், காய்ச்சி ஒட்டுவதன் முன்னர் வார்ப்பை முன்னதாகச் சூடுபடுத்துவதின் அவசியம் பற்றியும் அறிவு :—

(ஆ) வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் பதிவுகளை வைத்திருப்பதற்கும் முடியுமா என்பது :—

(இ) அனுபவம் :—

விண்ணபத்துடன் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றைய சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் (மூலங்கள் அல்ல) இணைக்கப்பட வேண்டும். இத் தஸ்தாவேஜுகள் இன்றிப் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

8. உள்ளூராட்சிச் சேவையிலோ அல்லது உள்ளூராட்சி மன்றத்திலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தாம் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கும்படி வேண்டப்படுவார்.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 26 ந் உ.

12-84—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### உள்ளூராட்சிச் சேவையின் தரம் II நி. எ. வ. எழுதுவினைஞர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—16.9.73

30.3.73 தேதிய சிங்களக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV ல் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் சுட்டிலக்கங்கள் 115 ம், 153 ம் கீழ்க்கண்டவாறு திருத்தப்படுகின்றன :—

| சுட்டி லக்கம் | பெயர் | உ. மன்றம் | சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|---|
| 115 .. | பி. வி. சிரிசேன | ... கொடகாவத்த ந. ச... | கணக்கியல், சட்டம் |
| 153 .. | எச். எம். ஜே. ஸமான் | புத்தளம் ந. ச. .. | கணக்கியல் |

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 22 ந் உ.

12-7—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

# துணை விதிகள்

எல்டீ-பீ. 18/65

## மாவனெல்லைப் பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் மாவனெல்லைப் பட்டின விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் அவருக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. ராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 07 ந் உ.

துணைவிதி

பொதுச்சந்தை

சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத்துணைவிதிகளின் XV ஆம் பாகத்திலுள்ள 1 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்காக "சந்தைப் பிரதேசம்" என்பது பொதுச்சந்தையின் மத்தியிலிருந்து கால் மைல் ஆரைக்குள் அடங்கும் பிரதேசமாதல் வேண்டும்.

12-213—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

## பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளுக்கமைவாக களனிப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. ராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 19 ந் உ.

துணைவிதிகள்

### தற்காலிகக் கட்டுமானங்கள்

1. தலைவராலோ அல்லது அதற்காகத் தலைவரால் அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் எவராலுமோ வழங்கப்பட்ட அனுமதிப்பத் திரமொன்றின் அதிகாரத்தின் பேரிலன்றி, சபையின் நிர்வாக எல்லைகளுக்குள்ளடங்கிய பெருவீதி எதிலும் தற்காலிகக் கட்டுமானம் எதனையும் எவரும் எழுப்பவோ அல்லது எழுப்பச் செய்யவோ கூடாது.

2. 1 ம் துணைவிதிக்கிணங்க ஒரு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் அதன் பொருட்டுத் தலைவருக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டியதோடு, அவ்விண்ணப்பத்தில்—

(1) உத்தேசிக்கப்பட்டுள்ள தற்காலிகக் கட்டுமானம் எழுப்பப்படவிருக் கும் இடத்தையும் ;

(2) கட்டுமானத்தின் தன்மையையும் பரிமாணங்களையும் ;

(3) அனுமதிப்பத்திரம் எவ்வளவு காலத்துக்கு வேண்டப்படுகிறது என்பதையும் கூறவேண்டும்.

3. (1) உத்தேச கட்டுமானத்துக்கான இடம் அண்டையிலுள்ளவர் களுக்கு வசதியீனங்களை உண்டுபண்ணக்கூடிய ஒரு பிரபலமான இடத்தில் அமைந்திருந்தால் ; அல்லது

(2) அந்த இடம், பஸ் வண்டிகள், பயண வண்டிகள், வண்டிகள் அல்லது வாடகைக்கார்கள் நிற்பாட்டப்படும் ஒரு பகிரங்க இடமாக ஏற்கனவே உபயோகிக்கப்பட்டால் ; அல்லது

(3) அத்தற்காலிகக் கட்டுமானம் எதற்காக உபயோகிக்கப்பட உத் தேசிக்கப்படுகிறதோ அதனால் எவ்வகையான தொல்லையாயினுஞ்சரி ஏற்படக்கூடியதாக இருந்தால் ; அல்லது

(4) அத்தற்காலிகக் கட்டுமானம் ஏதும் அதிகாரமளிக்கப்படாத கருமங் களை நடத்துதற்கு உத்தேசிக்கப்பட்டதாயிருந்தால் ; அல்லது

(5) கட்டும் இடத்தின் சொந்தக்காரருடைய அனுமதி பெறப்படாதிருந் தால் அல்லது ;

(6) அக்கட்டுமானம் எந்த வீதியிலும் எவ்விதத் தடங்கலையும் ஏற்படுத்தக்கூடியதாக அல்லது அதன் எல்லைகளினளவை மீறக் கூடியதாக இருந்தால்,

1 ம் துணைவிதியின் கீழ் தற்காலிகக் கட்டுமானம் எதனையும் அமைப்பதற்கு அனுமதிப்பத்திர மொன்று வழங்கப்படலாகாது.

4. 1 ம் துணை விதிக்கமைவாக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் இதன் கண்ணுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதாசாரப்படி ஒரு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சமய கைங் கரியங்களின் பொருட்டு அமைக்கப்படும் தற்காலிகக் கட்டுமானங்களுக்காக அவ்விதக் கட்டணம் செலுத்தப்படலாகாது.

5. ஒவ்வொரு தற்காலிகக் கட்டுமானத்துக்கும் 1 ம் துணை விதிக் கமைவாக அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற தலைவர் அல்லது உத்தி யோகத்தர் அத்தற்காலிகக்கட்டுமானம் எவ்வளவு காலத்துக்கு இருப் பதற்கு அனுமதிக்கப்படும் என்பதனை அவ்வனுமதிப்பத்திரத்தில் குறிப் பிடவேண்டும்.

6. 1 ம் துணை விதிக்கமைவாக வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு தற்காலிகக்கட்டுமானம் ஒன்றை அமைக்கும் அல்லது அமைக்கச் செய்யும் ஒவ்வொருவரும் அவ்வனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் அவ்விதத் தற்காலிகக் கட்டுமானத்தை அழித்து விடவேண்டும் அல்லது அதனை அழிப்பிக்கச்செய்ய வேண்டும்.

7. 1 ம் துணைவிதிக்கமைய வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் எதிலும், எந்நிபந்தனைகளின்படி அவ்வனுமதிப்பத்திரம் வழங்கப்படு கிறது என்பதைத் தலைவர் குறிப்பிடலாம்.

8. இத்துணைவிதிகளில் எதனையும் அல்லது 1 ம் துணை விதிக்கமைவாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை எதனையும் மீறிச் செய்யும் செய்கை ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்தாலும் அம்மீறுதல் தொடர்ந்து செய்யப்படும் பட்சத்தில் தக்க நியாயாதிக்கமுடைய நீதிமன்றமொன் றினால் அதற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர், அம்மீறுதலைத் தொடர்ந்து செய்த நாட்கள் ஒவ்வொன்றுக்கும் 25 ரூபாவுக்கு மேற் படாத மேலதிக அபராதம் ஒன்றினாலும் தண்டிக்கப்படக்கூடியதாகும்.

9. இத்துணை விதிகளில்—

"கட்டளைச் சட்டம்" எனில் (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

"தலைவர்" எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" எனில் களனிப்பட்டின சபை எனப் பொருள்படும்.

"தற்காலிகக் கட்டுமானம்" என்பது தூக்கிச் செல்லக்கூடிய ஒரு மேடை, பெயர்க்கக்கூடிய ஒரு சட்டம், ஒரு கூடாரம் பொருத்தப்பட்ட ஒரு மேடை, நிலத்தில் நிலையாகவோ அல்லது தற்காலிகமாக நாட்டப்பட்ட தாங்கு கோல்களின் மீது பொருத்தப் பட்ட ஒரு கூடாரம், அல்லது சக்கரங்களுடன் கூடிய நிலையான அமைப்பு எதையும் உள்ளடக்கும் ; மேலும்,

"வீதி" என்பது அக்கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே பொருளை உடையதாகும்.

### அட்டவணை

அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் காலம்—

| | ரூ. ச. |
|---|---|
| (அ) ஒரு மாதத்துக்கு மேற்படாதவிடத்து .. .. | 2 50 |
| (ஆ) ஒரு மாதத்துக்கு மேற்படுமிடத்து மேலதிகமான ஒவ் வொரு மாதத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும்.. | 2 50 |

12-238—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**விளம்பரம் இரத்துச்செய்தல்**

பதுளை மாநகரசபை

1973 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 2 ம் திகதிய இலங்கை குடியரசு வர்த்தமானி—இல. 45 இல் துணைவிதிகள் என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட " பதுளை மாநகர சபை குடிநீர் வேலைகள் " சம்பந்தமான அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

12–210—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

---

# நானாவித அறிவித்தல்கள்

**உடுவில் கிராம பிரதேசம்**

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1974 ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைக்கு உத்தரவு தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

இக்கிராம பிரதேச இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு இடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| பக்கீர் முகமட் சேகுமுகைதீன் | இணுவில் .. | இணுவில் சந்தை, இணுவில் ஆட்டிறைச்சிக்கடை |

சோ. அருணாசலம்,
நிர்வாகர்த்தர்,
உடுவில் கிராம பிரதேசம்.

உடுவில் கிராம பிரதேச அலுவலகம்,
உடுவில், சுன்னாகம்,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 28 ந் உ.

12–257—07.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 89

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணிஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரரால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **இலங்கைக் குடியரசு வர்த்தமானி** (வருடத்திற்கு) | உள்ளூர் | வெளியூர் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக்கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|
| | ரூ. ச. | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 23 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500 கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 07.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு நவெம்பர் மீ 09 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.